Source: *Tamil Murasu*, p3
Date: 22 July 2017

# சுகாதார பராமரிப்புக்கு $18 மி. செலவில் முப்பரிமாண அச்சகம்

முப்பரிமாண அச்சாக்கத்தின் துணையுடன் திசு உற்பத்தி, உட்பதிப்புகள், மருந்து தயாரிப்பு - இவைதான் $18 மில்லியன் செலவில் நேற்று தொடங்கப்பட்ட புதிய முப்பரிமாண அச்சாக்க நிலையம் ஆராயவிருக்கும் துறைகளில் சில.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தின் கூட்டுப்பொருள் தயாரிப்பு நிலையம், உயிரியல் மருத்துவத் துறையிலும் சுகாதாரப் பராமரிப்புத் துறையிலும் முப்பரிமாண அச்சாக்கத் தொழில்நுட்பத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்தும்.

நிலையத்தின் ஆய்வுக் கூடங்கள் கெண்ட் ரிட்ஜ் சாலையிலுள்ள பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ளன.

பல்கலைக்கழகத்தின் யோங் லூ லின் மருத்துவப் பள்ளி, பொறியியல் துறை, அறிவியல் துறை, பல்மருத்துவத் துறை, வடிவமைப்பு, சுற்றுப்புறத் துறை ஆகியவற்றின் பல்திறனையும் புதிய நிலையம் பயன்படுத்திக் கொள்ளும். அதோடு, முதுநிலை மாணவர்களுக்கான பயிற்சிகளையும் நடத்தும்.

"பல்கலைக்கழகத்தின் கூட்டுப் பொருள் தயாரிப்பு நிலையம், முப்பரிமாண அச்சாக்கத்தில் முன்னணி மையமாக உருவெடுக்க வேண்டும் என சிங்கப்பூர் வகுத்துள்ள தொலைநோக்குக்கு ஆதரவளிப்பதில் முக்கிய பங்காற்றும். பல துறைகளின் திறன்களை ஒன்றுதிரட்டுவதன்மூலம், தொழில்நுட்ப ஆற்றலை மேம்படுத்தவும், முப்பரிமாண அச்சாக்கத்தைப் பயன்படுத்தும் உயிரியல் மருத்துவத் தொழில்நுட்பங்களின் அறிவுச் சொத்துரிமை, வணிகமயம் ஆகியவற்றை முன்னேற்றவும் விரும்புகிறோம்," என்றார் நிலையத்தின் இணை இயக்குநர் பேராசிரியர் ஜெர்ரி ஃபூ யிங்-ஸி.

இவர் பொறியியல் துறையின் இயந்திரப் பொறியியல் பிரிவைச் சேர்ந்தவர்.

சுகாதார அமைச்சின் நாடாளுமன்றச் செயலாளர் அம்ரின் அமின், ஃபோர்ட் கேனிங் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற நமிக் சுகாதாரப் பராமரிப்பு மாநாட்டில் நிலையத்தைத் தொடங்கி வைத்தார்.

"ஆகப்புதிய புத்தாக்கத் தொழில்நுட்பத்தை மருத்துவத் துறையினரிடம் அறிமுகப்படுத்தி, நோயாளிகளுக்குக் கிடைக்கும் பலனை மேம்படுத்தும் நோக்கத்துடன் பல்கலைக்கழகத்தின் கூட்டுப்பொருள் தயாரிப்பு நிலையம் சுகாதாரப் பராமரிப்புப் பயன்பாடுகளில் முக்கிய கவனம் செலுத்துகிறது," என்றார் அவர்.

நிலையத்தின் ஆரம்ப நிதியைப் பல்கலைக்கழகமும், தேசிய கூட்டுப்பொருள் தயாரிப்புப் புத்தாக்கக் குழுமமும் பொருளியல் வளர்ச்சிக் கழகமும் வழங்கின.

'டாவ் யீ என்டர்பிரைசஸ்', 'க்ரியேட்ஸ்3டி', 'ஃபோர்பிரண்ட் அடிடீவ் மேனுஃபேக்ச்சரிங்', ஒஸ்டியோபோர் இன்டர்நேஷனல் ஆகிய நான்கு நிறுவனங்களும் நிலையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.